## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

## EDUS 4104 கல்வி உளவியலின் உயர்தரக் கோட்பாடுகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

---

01.(அ) "ஒரு பிள்ளையின் நுண்ணறிவின் அளவிலேற்படும் அதிகரிப்பிலும் பார்க்க நுண்ணறிவின் அமைப்பிலான மாற்றங்களே அறிவுசார் விருத்தியாகும்." ஜீன் பியாஜேயின் கருத்துக்களை மையமாக வைத்து இக்கூற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "மனிதர்களின் உளச் செயற்பாடுகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தழுவல், திரளமைப்பு, சமநிலையின்மை, ஒழுங்கமைப்பு போன்ற செயற்பாடுகள் காரணமாக அமைகின்றன." ஜீன் பியாஜே இச்செயல் முறைக்கு கொடுத்த கருத்துக்களை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

(இ) அறிவு விருத்தியில் சமநிலையான தன்மையைப் பேணிக்கொள்வதில் தன்மயமாதல், தன்னமைவாதல் ஆகியவற்றின் செயற்பாடுகளை விளக்குக.

(05 புள்ளிகள்)

02.(அ) அறிவுசார் விருத்தியின் நான்கு நிலைகளில் புலன் இயக்கப்பருவம் மிகவும் முக்கியமானதொன்றாகும். இப்பருவத்தில் பிள்ளையின் தன்னிச்சை செயல்களுக்கும் சிந்தனையின் ஆரம்ப நிலைக்குமிடையில் நடைபெறும் செயற்பாடுகளைப் படிமுறையாக முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) "பொருள் பற்றிய எண்ணக்கரு விருத்தியில் பொருட்களின் நிலைப்புத் தன்மை மிகவும் முக்கியமானதொன்றாகும்." இக்கூற்றினை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) "புலக்காட்சிக்கு அப்பால் சென்று உண்மை நிலையிலிருந்து தீர்வுகளைக் கூறக்கூடியவாகும்போது பிள்ளை நியம சிந்தனைப்பருவத்தை அடைகின்றது." இக்கருத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

03.(அ) சகல நடத்தைகளும் அவற்றின் விளைவுகளினாலே கட்டுப்படுத்தப்படுகின்றன. ஒரு செயற்பாட்டை செய்த பின்பு அதன் விளைவு எப்படி அமைகின்றதென்பதையும், சில விளைவுகளுக்கு இணக்கம் காட்டி, சிலவற்றை தடுக்கும்போது ஆற்றல் நிகழ்கின்ற கருத்தையும் முன்மொழிந்தவர் ஸ்கின்னர் ஆவார். வகுப்பறைக் கற்பித்தலின் இதன் பிரயோகத்தை உதாரணம் மூலம் விளக்குக.

(11 புள்ளிகள்)

(ஆ) கற்றலில் அறிவுசார் முறையில் தமது கவனத்தை செலுத்தியவர்கள் கெஸ்ரால்ட் உளவியலாளர்களாவார். கற்றலில் இவர்கள் கூறிய பின்வரும் படிமுறைகளின் செயற்பாடுகளை விளக்குக.

(i) பெற்றுக்கொள்ளல்

(ii) ஒழுங்காக்கல்

(iii) களஞ்சியப்படுத்தல்

(iv) தகவல்களைப் பயன்படுத்தல்

(08 புள்ளிகள்)

(இ) பின்வரும் பதங்களை சுருக்கமாக விளக்குக.

(i) தெரிவு செய் மீளவலியுறுத்தலும் தொடர் மீள வலியுறுத்தலின் படிநிலை உயர்வும்.

(ii) தூண்டி பொதுமைகாணல்.

(iii) சமூகக் கற்றல் கொள்கையின் நான்கு படி நிலைகள்

(06 புள்ளிகள்)

04.(அ) மக்டுகலின் இயல்பூக்கமென்பது பிறக்கும்போதே ஓர் உயிரியிடத்தில் அமைந்து விட்ட இயல்பான உளப்போக்காகும். இந்த இயல்பூக்கத்தின் வழியே நடக்கும் நடத்தையின் மூன்று உளக்கூறுகளையும் உதாரணமாகக் கொண்டு உயிரியின் நடத்தை பற்றிய செயற்பாட்டினை விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) "மனிதனின் ஊக்கலைப்பற்றி விளக்கமளிக்கும்போது சிக்மன் பிராய்டின் உளப்பகுப்பாய்வுக் கொள்கையுடன் அவருடைய ஆளுமை பற்றிய கொள்கையும் தொடர்புடையதாகின்றது." இக்கருத்தினை ஆராய்க.

(09 புள்ளிகள்)

(இ) ஏபிரகாம் மாஸ்லோவின் மனித நடத்தையின் தேவைக்கொள்கையின் "சுயதிறனில் நிறைவுத் தேவை" மிகவும் முக்கியமானதென்றாகும். வகுப்பறைக் கற்பித்தலில் இதன் பிரயோகத்தை சுருக்கமாக விளக்குக.

(07 புள்ளிகள்)

LIBRARY
EASTERN UNIVERSITY, SRI LANKA
23 AUG 2013

05. பின்வருவன விடயங்களைப் பற்றி சுருக்கமாக ஆராய்க.

(அ) புருணரின் அறிவுசார் விருத்திக்கொள்கையில் செயல்நிலை, சாயல்நிலை, குறியீட்டு நிலை.

(ஆ) தோண்டைக்கின் S-R இணைப்புக் கொள்கையில் பயிற்சி விதியும் விளைவு விதியும்.

(இ) ரோல்மனின் குறி கற்றல் கொள்கையின் விளைவும் அகக் காட்சிக்கொள்கையும்

(ஈ) கக்னே கூறிய கற்றலின் அமைப்பு மாதிரிப்படிகள்

(உ) கேட் லீவின் கூறிய ஊக்கலும் மனித நடத்தையும்.

(5x5=25 புள்ளிகள்)

06.(அ) உளவியல் சார் வழிமுறைகளுக்கும் ஆளுமைக்கும் இடையிலுள்ள தொடர்புகளிலும் பார்க்க, ஆளுமையானது சூழல் அமைப்பிலே காணப்படும் மீள வலியுறுத்தலில்களிலே அதிகம் தங்கியுள்ளது. அல்பேட் பந்தூரா ஆளுமை விருத்தி பற்றி மேற்கூறிய கருத்தினை ஆதாரமாக வைத்து மனித ஆளுமை விருத்தி பற்றி சுருக்கமாக ஆராய்க.

(12 புள்ளிகள்)

(ஆ) "ஆளுமை விருத்தியானது சில சிறப்பான படிமுறைகளினூடாக நடைபெறுகின்றது." சிக்மன் பிராய்ட் பிள்ளைகளில் கூறிய இப்படிமுறையை வைத்து ஆளுமையை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) ஆளுமை தொடர்பான மாறிகளில் கற்றுக்கொண்ட நடத்தை, சிந்தனைக் கோலங்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

***